குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 250 /2018

அ.சா. 01

2024–ம் ஆண்டு பிப்ரவரி 09–ம் தேதி வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி 01 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேசன் | ஜாதி | |
| கணவர் பெயர் | அமுதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 04.46 மணி,

Accused Senthilkumar absent. Petition U/s. 317 CrPC filed and allowed. . Advocate Mr.P.Kathiravan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கொண்டையனூர் குடியிருந்து கொண்டு டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். விபத்தில் காயமடைந்து இறந்த கார்த்திகேயன் எனது உடன் பிறந்த சகோதரர். கடந்த 02.09.2018 ம் தேதி எனது அண்ணன் அவருக்கு சொந்தமான Splender plus TN 30 AW 3850 என்ற வாகனத்தில் அவரது மாமியார் வீட்டிற்கு குழந்தைகளை பார்ப்பதற்கு செல்வதாக கூறிவிட்டு சென்றார்.

2. அதன்பின்பு தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்து எனது அண்ணன் கார்த்திகேயனுக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் ஓமலூர் அரசு மருத்துவமனை சென்றேன். அங்கு சென்ற பின்பு எனது அண்ணன் கார்த்திகேயன் சம்பவ நடந்த இடத்திலேயே இறந்துவிட்டதாக தெரியவந்தது.

3. எனது அண்ணன் சின்னதிருப்பதி – வெள்ளார் செல்லும் சாலையில் சுமை தங்கி ஏரி அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற போது அவருக்கு எதிர் திசையில்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.02.09 17:43:35 +0530

வந்த போலீரோ பிக்கப் வாகனம் TN 90 2173 வந்து என் அண்ணன் மீது மோதியதாக காவல் நிலையத்தில் தகவல் சொன்னார்கள். நான் இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். ( **அந்த புகார் அ.சா.ஆ 01 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) பிரேத விசாரணை போது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

4. விபத்து குறித்து நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரி. புகாரை யார் எழுதினார்கள் என்று குறிப்பிட்டு தெரியாது என்றால் சரி.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 04.52 மணி,

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2024.02.09 17:43:41 +0530